20.06.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா. 34

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | | |
| த/பெ | வேலாயுதம் | | |
| கிராமம் | கல்லூரி சாலை விழுப்புரம் | தொழில் | பெயிண்டர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 20.06.2025. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். நான் விழுப்புரம் எம்ஆர்ஜசி பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். எனக்கு அந்தப் பள்ளியில் படித்த போது சிவா, லோகேஷ் குமார் ஆகியோர்கள் நண்பர்களாக இருந்தார்கள். சிவா என்பவர் தற்போது ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறார். லோகேஷ் குமார்(அ.சா. 4) என்பவர் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தார். தற்போதும் அதே காவல்துறையில்தான் பணி செய்து வருகிறார். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சுமார் 4 அல்லது 5 மணிக்கு ரயில்வே ஜங்ஷன் அருகில் உள்ள மகாராஜா டீக்கடைக்கு டீ குடிக்க சென்றிருந்தேன். அந்த கடையில் செய்தித்தாள் வால்பேப்பரில் விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் ஒரு வாலிபரை அடித்துக் கொலை என்று போட்டிருந்தது. இது சம்பந்தமாக என்ன இருப்புப் பாதை காவல் நிலையத்தில் கொலை என்று போட்டிருக்கிறது? என்று எனது நண்பர்

லோகேஷ் குமாருக்கு போன் செய்து கேட்டேன். அதற்கு அவர் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருக்கிறேன் நான் வந்து நேராக பதில் சொல்கிறேன் என்று சொன்னார். அவர் வந்தார். நான் போன் செய்து சில தினங்கள் கழித்து வந்தார். அவர் என்னிடம் நாங்கள் அந்த கொலை சம்பந்தமான சிக்கலில் மாட்டிக் கொண்டோம் எங்களுக்கு நீ உதவி செய்ய வேண்டும் என்று கேட்டார். மேலும் நீ காவல் நிலையத்திற்கு போ, அங்கு சாட்சி கையெழுத்து கேட்பார்கள், நீ கையெழுத்து போட்டுவிட்டு வா என்று சொன்னார். நான் போனேன். பிறகு நான் ரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு காவல்துறையினர் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். நான் எனது கையெழுத்தை பேப்பரில் தான் போட்டேன். அந்த பேப்பரில் எதுவும் எழுதப்படவில்லை. நான் காவல் நிலையம் போனபோது என்னிடம் போலீசார் கருப்பு நிற பர்சையும், அதில் ரூ.450/- பணம் இருந்ததையும், ஒரு விநாயகர் கோயில் அருகில் இருந்த வாழை தோப்பில் இருந்து எடுத்ததாகவும், அதை நான் பார்த்ததாகவும் சொல்ல சொன்னார்கள். அதன்பிறகு போலீசார் அது குறித்து என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை நீதித்துறை நடுவர் விசாரணை செய்தார். அதன்பிறகு என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள். என்னை நீதித்துறை நடுவர் விசாரணை செய்தபோது நான் கையெழுத்து போட்டேன். வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேலும் நீதித்துறை நடுவர் என்னை அறையில் வைத்து (164 குவிமுச) வாக்குமூலம் பெற்றார். அதில் நான் கையெழுத்துக்கள் போட்டேன். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த 164 குவிமுச வாக்குமூலம் ஆகும். அது அ.சா.ஆ. 27 ஆகும். இது சம்பந்தமாக என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை முதல்முறையாக 09-06-2014 தேதியில் தான் நீதித்துறை நடுவர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையின் போது நான் 07-05-2014 அன்று என் தங்கை வீட்டிற்கு செல்வதற்காக சென்னை செல்வதற்காக விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது காவல்துறையினர் விநாயகர் கோயில் பக்கத்தில் உள்ள வாழை தோப்பிலிருந்து ஒரு பர்ஸை எடுத்ததாக நான் அந்த வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் என்னை சாட்சியாக கையெழுத்து போடச் சொன்னார்கள் என்று

சொன்னேனா என்றால் சொன்னேன். அதில் நான் மகாராஜா டீக்கடைக்கு செல்லும்போது நியூஸ் பேப்பர் வால்பேப்பரில் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நபர் காவல் துறையினர் அடித்துக் கொலை என்று போட்டிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பின்னிட்டு இந்த வழக்கு சம்பந்தமாக என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சுமார் ஒரு வருடம் கழித்து 2015 ஆம் ஆண்டு என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 13-10-2015 அன்று விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்-2 என்பவர் முன்னிலையில் ஒரு வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். நான் அந்த வாக்குமூலத்திலும், என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்த வாக்குமூலத்திலும், நான் மகாராஜா டீக்கடைக்கு செல்லும்போது நியூஸ் பேப்பர் வால்பேப்பரில் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நபர் காவல் துறையினர் அடித்துக் கொலை என்று போட்டிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நீதித்துறை நடுவரின் வாக்குமூலத்திலும் சரி, சிபிசிஐடி போலீசார் வாக்குமூலத்திலும் சரி, எதற்காக நான் ரயில்வே நிலையம் சென்றேன் என்றும், எதற்காக டீக்கடைக்கு சென்றேன் என்றும், எதற்காக என்னை ரயில்வே காவல்துறையினர் விசாரணை செய்தார்கள் என்றும், சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இரண்டாவதாக 12-10-2015 நீதித்துறை நடுவர் வாக்கு மூலத்தில் என் முன்பாக 07-05-2014 ம் தேதி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வாழை மரத்தின் கீழ் ஒரு கருப்பு பர்ஸ் எடுத்ததாகவும் அதில் ரூபாய் 450 பணம் இருந்ததாகவும் சொல்லி என் முன்பாக அதை கைப்பற்றியதாக அதில் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் முதலில் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தை மறைத்து என்னை சிபிசிஐடி போலீசார் அவர்களிடமும், மற்றும் நீதித்துறை நடுவரிடமும் நாங்கள் சொல்லிக் கொடுப்பது போல் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று மிரட்டியதால், நான் புதிய வாக்குமூலத்தை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் சிபிசிஐடி போலீசார் என்னை மிரட்டியதால் தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்னை நீதித்துறை நடுவர் முதலில் விசாரணை செய்த போது பர்ஸ் இருந்தது பற்றியும், அதில் பணம் இருந்தது பற்றியும், எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல நியூஸ் பேப்பர் வால்பேப்பரில் ஒரு நபர் அடித்துக் கொலை என்று செய்தியே வரவில்லை என்று

சொன்னால் சரியல்ல. நான் செய்தித்தாளை வாங்கி படித்துப் பார்க்கவில்லை. என்ன பிரச்சனை என்று நான் படித்து தெரிந்து கொள்ளவில்லை. இறந்து போன நபர் கூட யார் என்று எனக்குத் தெரியாது. என்னை இதுவரையில் நிறைய காவல் துறை அதிகாரிகள் விசாரணை செய்தார்கள். அவர்கள் யார் என்று தெரியாது. நான் அனைவரிடமே வெள்ளைத்தாளில் தான் கையெழுத்து செய்தேனா என்றால் அதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அதிகாரிகளிடம் நான் என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல்துறை அதிகாரிகள் யாரும் வந்து என்னை கூப்பிடவில்லை. நான் எந்த அதிகாரியிடம் என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் நீதித்துறை நடுவர் என்னை விசாரணை செய்த போது எதற்காக நான் முதலில் அப்படி சொன்னேன் அதன் பிறகு ஏன் பிறகு மாற்றி சொன்னேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் சொல்லி தான் அப்படி சாட்சியமளித்தேன் என்றால் சரியல்ல. நான் மற்ற அதிகாரிகள் விசாரணை செய்த போது யாரிடமும் அப்படி சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை